## தமிழ் நாட்டின் நிலையும், தமிழ் மக்களின் தொண்டும்.

தமிழ்ச் செல்வர்களே !

பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாடு, திருமகனாலும், திருச் சபையாலும், திருவருளாலும், திருக் குறளாலும், திருவாம் பெற்று, பரத கண்டத்திலே கல்வியிலும், நாகரீகத்திலும், ஒழுக்கத்திலும், மற்றைய சிறப்புகளிலும் நிகரில்லாததெனப் பேர் பெற்றுச் சாதிச் சமயப் பூசல்களில்லாமல் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" என்ற திருவள்ளுவரின் திருமொழிக் கிணங்க யாதொரு ஜாதி வித்தியாசமு மில்லாமல், நகமும், சதையும் போல் வாழ்ந்து, ஏனைய தேசங்களுக்குத் தன்து விளைவு பொருள்களையும், கைத் தொழில் சாமான்களையும் ஈந்து கொண்டு எங்குங் கொண்டாடப்பட்டு வந்தது.

இன்னும் பொற்கைப் பாண்டியனையும், மனு நீதி கண்ட சோழனையும் ஈந்து உலகிற்கே சத்தியத்தையும், ஜீவகாருண்யத்தையும் சிறப்பித்துக் காட்டிக் கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்ச் சங்கங்களையும், அவற்றின் நூல்களையும், மற்றையச் சிறப்புகளையும் கொண்டு, போற்றப்பட்டு வந்தது என்பது மிகையாகாது.

அப்பேர்ப்பட்ட சிறப்புகளைக் கொண்ட நம் தமிழ் நாடு, தற்போது சுய மதிப்பு இழந்து, தமிழை யிழந்து, பொருளை யிழந்து, கைத் தொழிலை யிழந்து, வியாபாரத்தை யிழந்து, அன்பிழந்து, அறி விழந்து, ஆற்ற லிழந்து, ஜாதிச் சமயப் பூசல்களால் சிக்குண்டு, மூட நம்பிக்கையில் உழன்று, கீழ், மேல் என்ற அகங்காரங் கொண்டு, கழுதை, நாய், பன்றி முதலிய ஜந்துக்கள் நடக்கும் பாதையில் கூட மனிதன் செல்லக் கூடா தென்ற மூட வைதீகங் கொண்டு, நம் சகோதரர்களில் சிலரை ஆலய தெரிசனஞ் செய்ய விடாமல் ஒருவருக் கொருவர் சண்டை போட்டு, அந்நியருக்கு அடிமைப்பட்டு, வறுமைப் பிணியால் துன் புற்றுக் கொண்டிருப்பது கண் கூடு. இவ்விதம் நமது தமிழ் நாடு, சீர் குலைந்து, நலங் கெட்டு, மற்றவர்களால் ஏளனஞ் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு அந்நிய அரசாட்சி ஒரு சிறு காரணமாயேயாகும். ஜாதிச் சமயப்பூசல்களும், அவற்றிலுள்ள வித்தியாசங்களும், மூட நம்பிக்கையுமே முக்கியகாரண மென்பது வெள்ளிடைமலை. நமக்குள் ஒற்றுமை யிருப்பின் அந்நியருக்கு இங்கே நிற்க இட மேது? பேசவா வேது? அடக்கப் படை யேது? கேட்பாரின்றி, ஆதரிப்பாரின்றி தானே சென்று விடுவாரன்றோ? சில கூலிகள் அந்நியரின் பேச்சைக் கேட்ட போதிலும், நம் ஜனங்கள் அவர்களை அலக்ஷியஞ் செய்ய மாட்டார்கள். உங்களுக்கு அது செய்வோம்; இது செய்வோ மென்ற பசப்பு வார்த்தைகள் பகன்ற போதிலும், நம் மக்கள் சிறிதும் பொருட் படுத்தாமல் தள்ளி விடுவார்கள். இத்தகைய ஜனங்கள், தற்பொழுது அந்நியருடன் ஒத்துழைக்க முற்பட்டதின் காரணத்தை உற்று ஆராய்வோமே யானால், நமக் குள்ளிருக்கும் ஜாதி வித்தியாசங்களும், அசத்தையும், மூடக் கொள்கைகளுமே அடிப்படை என்புது விளங்காமற் போகாது.

ஜாதி வித்தியாசம் முற் காலத்தில் ஏற்பட்டதுவா? அல்லது தற்காலத்தில் ஏற்பட்டதுவா? என் பதை நோக்குழி, தற் கால மென்பது விளங்காமற் போகாது. நம் மூதாட்டியாரும் "ஜாதி இரண்டொழிய வேறில்லை" என்று பகர்ந்திருக்கின்றனர். திருவள்ளுவரும், "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்துங் கீழல்லார் கீழல்லர்" என்று பாடி யிருக்கின்றனர், நாலடியாரும் "நல் குல மென்றும் தீய குல மென்றும் சொல்வன வல்லாற் பொருளில்லை—தொல் சிறப்பின் ஒண் பொருளொன்றோ தவம், கல்வி யாள் வினை யென்றி வற்றான் ஆகுங் குலம்" என்று சொல்லி இருக்கின்றனர். இதை உணர்ந்தே நம் பாரதியாரும்

"ஜாதிகளில்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்—
நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு
நிறைய உடையவர்கள் மேலாம்"

என நமக்குப் புத்தி புகட்டி யிருக்கின்றனர்.

தமிழ்த் தாயின் அருந் தவப் புதல்வர்களே! பண்டைக் காலச் சிறப்பை அறிந்தோமா? அல்லது தற் கால நிலையை யறிந்தோமா? நம் சகோதரர் அந்நிய மதம் புகுதலை யறிந்தோமா? அன்றி நாய், நரி, பேய், கழுகு முதலியவை வசிக்கு மிடங்களில் கூட நம் சகோதரர்களைச் செல்ல விடுகிறோமா? மூட பழக்க வழக்கங்களை ஒழித்தோமா?

பாலிய மணத்தின் பரிதாப நிலையை அறிந்தோமா? ஒன்றையும் உணர்ந்தோமல்லோம். என்ன கொடுமை! என்ன அநியாயம்!! என்ன மதி!!! என்ன நிலை! இது தானா நம் நாகரீகம்? இது தானா நம் கடமை? இது தானா நம் செயல்? இது தானா நாம் ஆற்றுந் தொண்டு? அன்றியும், அந்நியர் நம்மை ஏளனஞ் செய்வதற்கு—தூற்றுவதற்கு ஜாதி வித்தியாசமும், மூட பழக்க வழக்கங்களுமே காரண மென்பதை அறிந்தோ மல்லோம். அதனா லன்றோ நம் நாடு அந்நியருக்கு அடிமைப்பட்டு, சீர் குலைந்து, பண்டைச் சிறப் பிழந்து, தாய் மொழியாம் தமிழையும் இழந்து வருகின்றது?

தமிழ் மக்களே! எழுங்கள் எழுங்கள். இன்னும் உறங்க வேண்டாம். நம் கடமையை நாம் செய்யத் தவறினால், தமிழ் மொழியும், தாய் நாடும், பண்டைச் சிறப்பும் மறைந்து விடுவதல்லாமல், நம் சகோதரர்கள் அந்நிய மதத்தில் புகுந்து, வளர்த்த கடா மார்பில் பாய்வதே போல் நமக்கு எதிரிகளாய் வந்து விடுவார்களென்பது திண்ணம் திண்ணம்.

ஆதலின் நம் மக்களனைவரும் ஒன்று கூடி ஜாதி வித்தியாசங்களையும், மூட நம்பிக்கைகளையும் ஒழிப்பான் வேண்டி—அந்நிய மதத்தில் சேருவதைத் தவிர்ப்பான் வேண்டி—நம் நாட்டையும், நம் பாஷையையும் முன்னேற்றுவான் வேண்டி அரும் பெருந் தியாகங்களைச் செய்ய முன் வர வேண்டும். தட்டுகிறவருக்கே திறக்கப்படும்; தேடுகிறவனே கண்டடைகிறான்; துன்பப்படுகிறவனே இன்ப மடைகிறான் என்ற கிறிஸ்து நாதரின் திருவாய் மொழிக் கிணங்க, நாம் துன்பப்பட்டால் தான்—கஷ்டப்பட்டால் தான்—தியாகங்களைச் செய்தால் தான் நம் நாட்டையும், நம் பாஷையையும், நம் தேசத்தையும், நம் சகோதரர்களையும், நம் சிறப்பையும் அடைய முடியு மென்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக நாம் ஜாதி வித்தியாசங்களை ஒழிப்பதற்கும், நம் நாட்டையும், நம் பாஷையையும், விருத்தி செய்வதற்கும், மூட நம்பிக்கைகளை ஒழித்து சமத்துவத்தை நிலை நாட்ட தமிழ்த் தாய் அருள் புரிவாராகவும்.

ப. வே. ச. பழனிச்சாமி,
விருதுநகர்.

---

பூ மகள் திலக மெனப் பொலிவுற்
(றிருந்த நாடு
நா மகிழ் பாஷையாம் நற் றமிழ்
(கொழிக்கும் நாடு
தே புகல் வழியில் நின்று தீண்டா
(மை யறியா நாடு
தோ முகில் சூழ்ந்திப் போது துன்
(புறுதையோ ! நாடு.

துன்பு நீக்கி இன்ப மாக்க தொண்டு
(செய்ய வாருமின்
அன்பு நிலை மனத்தோடு அனைவரும்
(ஒன்று கூடி
முன்பு உள்ள பெருமைகளை முழக்
(கி நீவிர் திசைகளெல்லாம்
வன்பு மிகு வீரர்களே வளந் தமிழ்
(நாட்டவரே !

---

## தக்ஷணமாற நாடார் சங்கம்.

மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள தக்ஷணமாற நாடார்களுக்கெல்லாம் பொதுவான ஒரு மகாநாடு 18—2—28-ல் இட்டமொழி எ. வி. யோசேப்பு நாடார் ஹைஸ்கூலில் நடைபெறலாயிற்று. அதற்கென்று சிறப்பாய் அலங்கரிக்கப் பெற்றிருந்த ஓர் பெரிய ஹாலில் ஷை கூட்டம் நடந்தேறினது.

தக்ஷணமாற நாடார்களின் சுமார் 30 பேட்டைகளில் பிரபல வர்த்தகம் புரியும் நாடார்கள் எல்லோரும் ஷை பேட்டைகளுக்கு மகமை செலுத்தும் உறவின்முறை நாடாரவர்களும், மற்றும் பல கல்விமான்களும், வக்கீல்களும், ஷை கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர். சுமார் 1000 பேர்கள் ஷை மகாநாட்டிற்கு ஆஜராயிருந்தனர். அதிக உற்சாகத்தோடும், குதுகலத்தோடும் ஷை கூட்டம் மதியம் 2-மணிக்கு ஆரம்பமாயிற்று. முதலில் இட்டமொழி ஸ்ரீமான் டி. எஸ். ஆசீர்வாதம் நாடாரவர்கள் நல்வரவேற்புப்பத்திரம் வாசித்தார்கள்.

அக்கூட்டத்துக்கு தலைவராக மகா-ா-ா-ஸ்ரீ தானியல் தாமஸ் நாடார் அவர்கள் பி. எ., எம். எல். ஸி. ஏகசம்மதத்தோடு தெரிந்தெடுக்கப்பெற்று அக்கிராசனத்தில் அமர்ந்ததும் பெரிய கரகோஷம் உண்டாயிற்று. தவிர, பிளாட்பாரத்தில் வீற்றிருந்த மற்றத் தலைவர்கள் ஸ்ரீமான்களான எஸ். எஸ். ஆதித்தநாடாரவர்கள் பி. எ. பி. எல். எ. வி. பால் நாடார் அவர்கள் பி. எ. பி. யல். ஆறுமுகநேரி எஸ். பொன்னையா நாடார் அவர்கள், ஜில்லா ரிஜிஸ்ட்ரார் எ. அமிர்தநாயகம் நாடார் அவர்கள், சாத்தன்குளம் ஸ்டீபன் தம்பான் அவர்கள் பி. எ, யல். டி. முதலியவர்களாவர்.

அக்கிராசனாதிபதியவர்கள் முதன் முதலாக அம்மகாநாடு கூடினதின் நோக்கங்களை நன்கு எடுத்துரைத்தனர். அந்த நோக்கங்களாவன:—முதலாவது தக்ஷணமாற நாடார்களுக்குச் சொந்தமாயிருக்கிற சுமார் முப்பதுக்கதிகமான வியாபாரப்பேட்டைகளை யெல்லாம், ஒரு நல்ல ஸ்திதியில் வைத்து முன்னேற்றுவிக்குமாறு, தக்ஷணமாற நாடார் மகமைப் பரிபாலனச் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, அதன் பேருக்கு ஷை பேட்டைகளை ரிஜிஸ்ட்டர் செய்து அவைகளை மேற்பார்த்து நடத்துவது. இரண்டாவது மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 2000 ரூபாய் வரும்படி தரத்தக்க அப்பேட்டைகளின் வரும்படியைக்கொண்டு, தக்ஷணமாற நாடார்களின் வியாபாரத்திற்கு வசதியான புதுப் பேட்டைகளைத் திறக்கவும், கல்விக்கு அநுகூலமாகப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவும், பிரயாணங்களுக்கும் ஆலயச் சேவைகளுக்கும் உதவியான சத்திரங்கள், சாவடிகள், கிணறுகள், முதலியன நிறுவிக்கவும், மேல் எடபடிக்கைகள் நடத்துவது. மூன்றாவது, தற்போது பேட்டைகளின் உதவியை அவசியமாய் எதிர்பார்த்திருக்கும் இட்டமொழி எ. வி. யோசேப்பு நாடார் ஹைஸ்கூலை ஷை சங்கத்தின் பேருக்கு வாங்கி, அதன் ஆதரவில் வைத்து நடத்திவருவது.

இந்நோக்கங்களை அக்கிராசனாதிபதியவர்கள் அங்கை நெல்லிக்கனிபோல் அவையோர்எல்லோருக்கும் எடுத்தோதி இந்நோக்கங்கள் செவ்வனே நிறைவேறப் பெறின் தக்ஷணமாற நாடார்களின் தற்போதிய கீர்த்தியும், பிற்போதிய அவர் தம்மக்களின் முன்னேற்றமும் எத்துணை சிறந்து விளங்கும் என்பதை எடுத்துக் காட்டினர். முன்னோர் நிலை நாட்டின பொது ஸ்தானங்களைப் பின்னோர்பேணுதவிடின்பேரிழிவைத்தருமென்றும், பேணுமாறு பரிபாலன சங்கம் ஏற்படுத்துவது பேரறிவுடைய செயல் என்றும், வலியவந்த சீதேவியை வாயிலில் உடனே வரவேற்றுக் கொள்வதைப்போல், தானாய் நம்மை வந்தடையும் எ. வி. யோசேப்பு நாடார் ஹைஸ்கூலை உடனே ஆதரித்து வருவது எத்துணை அருமையான செய்கை என்றும், அன்னவர் தம் ஆற்றல் விளங்கச் சாற்றினர். தவிர, நாடார் மக்களின் முற்கால தற்கால வர்த்தக மேன்மையையும், ஒற்றுமையின் சிரேஷ்டத்தையும், ஒத்துழைக்கும் சங்க வேற்பாடுகளின் சங்கைகளையும் தலைவர் அலைபோலும் ஒன்றின் பின்னொன்றாக அறைந்தார். அவையோ செல்வோரும் அம்மொழிகளைச் செவியேற்றுச் சிந்தையும் கிறித்து அமைதலோடிருந்தனர்.

தலைவரின் சொற்பொழிவு, அலைபோல் ஒலித்த கரகோஷத்துடன் முடிந்ததும், சாத்தான் குளம் ஸ்ரீமான் தம்பான் அவர்கள் கல்வியின் மேன்மையையும், நம்மவர் அதனால் அடைதலாகும் சீர்த்தியையும், அதனை அசட்டை செய்யின் விளையும் அசட்டுத் தன்மையையும் கீர்த்தியாய்ச் சொல்லி முடித்தனர்.

பின்னர் அக்கிராசனாதிபதியவர்களின் ஆணையின்பேரில் சங்கை எ. வி. பால் நாடாரவர்கள் பேட்டைகளின் பரம்பரைச் சரித்திரங்களை விவரித்துக் காட்டிவிட்டு, அவைகளை ரிஜிஸ்ட்டர் செய்வதற்கென்று ஏற்படும் சங்க வேற்பாடுகளையும், விதிகளையும் சாங்கோபாங்கமாய் எடுத்துரைக்க ஆரம்பித்து, ஒவ்வொரு விதியையும், ஒன்றன் பின்னொன்றாய் வாசித்துப் பிரரேபித்தனர். ஆக்ஷேபனை சொல்வார் ஆக்ஷேபனை சொல்லினர். திருத்தல் செய்வார் திருத்தல் செய்தனர். பின்னர் ஏகமனதுடன் எல்லோரும் ஆமோதிப்பாராக, அத்தனை விதிகளும் கஷ்ட மில்லாமல் ஒப்புக் கொள்ளப் பட்டன.

எனவே, தக்ஷணமாற நாடார்களின் இம்மகாநாட்டின் மூலமாய் மகமைப் பேட்டைகளின் பரிபாலன சங்கம் ஏற்பட்டுவிடவே, ஷை சங்கத்திற்குப் பிரசிடெண்டாக, ஸ்ரீமான்எஸ். எஸ். ஆதித்த நாடாரவர்கள் தெரிந்தெடுக்கப்பெற்றார்கள். தவிர, ஸ்ரீமான்களான தானியல் தாமஸ்நாடாரவர்கள் எம். யல். ஸி., எ. வி. பால் நாடாரவர்கள் பி. எ. பி. யல். எஸ். பொன்னையா நாடார் அவர்கள், நட்டாத்தி பண்ணையார், முத்து வைகுந்த நாடாரவர்கள், ராமையா நாடாரவர்கள்—பண்டாரபுரம் ஆகிய 5 பேரும் வைஸ்பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இட்டமொழிஹைஸ்கூல்மானேஜரவர்களஎஸ். துரைச்சாமி நாடாரவர்கள் பி. எ. எல். டி. செக்ரட்டேரியாகவும் ஐ. சிவசுப்பிரமணிய நாடார் அவர்கள்—ஆறுமுகநேரி அசிஸ்டெண்ட் செக்கரட்டேரியாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். இப்பொது ஜன நன்மைக்கான மகாநாட்டிற்கு ஆதிகாரணராயும், அதற்கென்று விசேஷித்த முயற்சி எடுத்து வருபவருமான சங்கையின் செண்ட்யர்மானர்த்தம் நாடாரவர்கள் பேட்டைகளின் சூப்பர் வைஸராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அதன் பிறகு பேட்டைகளின் வியாபாரங்களிலிருந்தும், மற்றவர்களிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றுக் கடைசியில் சுமார் 100 பேர் அடங்கியதோர் எக்ஸிகியூட்டிங் கமிட்டி நிய மனமானது.

இவற்றிற்கிடையில் ஸ்ரீமான்எஸ். எஸ். ஆதித்த நாடாரவர்கள் தாம் பேட்டை விஷயங்களில் இது காறும் உழைத்திருக்கும் உழைப்பானது இம்மகாநாட்டினாலே பூர்த்திபெறுதல் அவசியம் என்று கூறி ஜனங்களை உற்சாக வார்த்தைகளினால் ஊக்கி யெழுப்பியது மிகவும் அவசியமாயிருந்தது. ஆறுமுகனேரி எஸ். பொன்னையா நாடாரவர்கள் தமது விசேஷித்த அநுபவத்தால் ஒவ்வொரு விதிக்கும் ஏற்றபடி பிரரேபனைகளையும் தந்துதவியது பேருபகாரமாயும், இம்மகாநாடு சித்தி பெறுவதற்கு அநுகூலமாயும் இருந்தது என்பதற்கு ஐயமில்லை. தவிர, அநுபவசாலிகளான வியாபாரிகள் எல்லோரும் போதிய தமது அபிமானத்தினாலும் அநுபவத்தினாலும் ஆசையோடு பொருந்தி உழைத்து நல்ல யோசனைகள் உதவி இம்மகாநாடு சித்திபெறற்கு ஏதுவாயிருந்தனர்.

பிறகு பிரசிடெண்ட் அவர்கள் இம்மகாநாட்டின் நல்வாழ்வைக் கருதித் தம் நல் விருப்பத்தைத் தெரிவிக்கும்படி ரங்கூன், ராமநாதபுரம், மதுரை முதலிய இடங்களில் உள்ள நாடார் பெருமக்கள் அனுப்பியிருந்த 20, 27 தந்திகளை வாசித்தனர். பின்னர் தக்ஷணமாற நாடார் மகமைப் பரிபாலன சங்கத்தை ரிஜிஸ்ட்டர் செய்வதற்கான செலவு தொகைக் கடுத்ததோர் தீர்மானம் தீர்மானிக்கப்பெற்றது.

ஈற்றில் தலைவர் மகா-ா-ா-ஸ்ரீ தானியல் தாமஸ் நாடாரவர்கள் முடிவுரை கூறிய பின் ஸ்ரீமான் டி. எஸ். ஆசீர்வாதம் நாடாரவர்கள் பி. எ. யல். டி. விஜயம் செய்திருந்த கனதனவான்களுக்கு வந்தனம் கூற ஆனந்தத்தோடு கலைந்தது.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



[illegible]

நாடார்குலமித்திரன்

பிரபவ வரு மாசி மீ உ௰உ உ

# வழக்கம்.

வழக்கம் என்பது எப்போதும் இடை விடாமற் செய்து வரும் எந்தக் காரியத்தையும் சொல்வதாகும். இதில் நல்ல வழக்கம், கெட்ட வழக்கம் என இரண்டும் உண்டு. நல்ல வழக்கத்தையே மக்கள் கைக் கொண்டு எக் காலத்திலும் பழக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டு மென்பதும், கெட்ட வழக்கங்களை மக்கள் பழக்கத்தில் வைத்துக் கொள்ளக் கூடா தென்பதும் தான் அறிவுடையார் துணிபு. நன் றென்பதை இன்றே செய்; தீமையைச் செய்யாதே; தெரியாமற் செய்தால் உடனே விட்டு விடு என்னும் உபதேசத்தைத் தான் தாயானவள் பிள்ளைகளுக்கும், குருவானவர் சீடருக்கும், அறிவுடையார் அறிவில்லாதாருக்கும், அரசன் குடிகளுக்கும் உபதேசிக்க வேண்டியதாகும். எந் நாட்டிலும், எக் காலத்திலும் மக்கள் பாலன்பு கொண்ட தேசாசார சீர்திருத்தக் காரர்களும் தீய வழக்கங்களை அகற்றத் தான் பாடுபட்டு வருகின்றார்கள். அறிவுடையார் எழுதி வைத்த நூல்களிலும் அவ்வாறு தான் சொல்லப்பட்டிருக்கிறது.

"தீயவை தீய பயத்த லாற்தீயவை
தீயினு மஞ்சப்படும்"

என நாயனார் தீயவை செய்யத்தகா தென வெகு அழுத்தமாய்ச் சொல்லி யிருக்கிறார். தீ வழக்கமுடையார் அறிவிலா ரென்பதை விளக்க இராமலிங்க சுவாமிகளும் "தீது வேண்டிய சிறியர் தம் மனையிற் சென்று நின்று நீதிகைத் திட னெஞ்சே" யெனக் கூறி யுள்ளார். ஆகையால் மனிதராய்ப் பிறந்த யாவரும் நல்லவை நாடவும், தீயவை யகற்றவும் கட்டுப்பட்டிருக்கின்றார்கள்.

நம் பாரத நாட்டில் பல அயல் நாட்டார் குடி யேறி ஸ்திரமாய் வசிக்க நேரிட்ட கால முதற் கொண்டு அனேக புராதன வழக்கங்கள் மாறிப் புது வழக்கங்கள் புகுந்து, பழக்கத்தில் வந்து விட்டன. சில வழக்கங்கள் மாறிற் றென்றால் மனித வாழ்க்கைக் கின்றியமையாத நல் வழக்கங்களே பெரும்பாலும் மாறி விட்டன. என் மாறி விட்ட தென்றால், காலப் போக்கு தானே மாற்றிக் கொள்கிற தென்று சொல்லப்படுகிறது. அதுபோல் மதம் என்ற ஒரு பொதுப் பெயரால் ஒரு சாரார் நம்மை அடிமைக் குழியி லாழ்த்தி, தீண்டாதே; வாராதே; பாராதே; படியாதே; பாப்பானுக்கே பல தானத்தையும் பண்ணு; கன்னிகா தான மூதற் கொண்டு சங்கோசமில்லாமற் செய்; பெண்களைக் கோவில் மாடுகளுக்குச் சமானமாகப் பொட்டுக் கட்டி விடுஎனும் பல அசம்பாவிதங்களை ஆசார சீர்திருத்தக் காரர்கள் ஒழித்து விடுவோ மென்றால் அவைகள் புராதன வழக்கம்; மாற்றக் கூடாத பழக்கம்; மாற்றினால் மதம் போய் விடும்; சுவாமி கோபித்துக் கொள்ளும்; குடி கெட்டு விடு மென்று கூப்பாடு போடுகின்றார்கள். சட்ட சபையில் ஒரு கனவானுடை கை குலுக்கிச் சரியா யிருந்து சாப்பிடக் கூடிய ஒருவர், அக் கனவானுடைய தம்பியை ஒரு கிராமத்தில் நுழைவதைத் தடுத்துச் சண்டை போடுகிறார் ஏனென்று கேட்டால், அது சட்ட சபை வழக்கம்; இது எங்கள் ஜாதி வழக்க மென்று சொல்லி விடுகிறார்.

காவிர ஜகத் குரு சங்காச்சாரியாரும், அவர் கால் வழி வந்தவர்களும் பாரத பூமியிற் புராதனக் குடிகளாய் வசிக்கின்ற எழு கோடி மக்களை இந்துக்களல்ல வென்றும், அவர்களைத் தொட்டாலும் தோஷம்; கண்டாலும் பாவ மென்று கண் மூடித்தனமாய்க் கத்துவார்கள். இச் சங்கரரே, "மங்கையர் மையலில் பட்ட மன்னருக்கு மதிவே றுண்டோ" வென்ற கேடு சூழ்ந்து, நாடு இழந்த இந்தூர் ராஜாவை மணக்க இணக்கமாய் வந்திருக்கும் அமெரிக்க மாது மிஸ் மில்லரை இந்துவாக ஆக்கலா மென்கிறார்கள். அவள் பணக்காரி யென்று பாலில் பழம் நழுவி விழுந்தாற் போல் வெகு இணக்கமாய் ஒரு அறிக்கை வெளி யிட்டிருக்கிறார். நமது புதுக்கோட்டை ராஜா அவர்கள் ஆஸ்திரேலியா மாதைக் கலியாணம் செய்ததை ஆட்சேபித்த தென்னாட்டுச் சங்கார் திருக் கூட்ட மூர்த்திகளும், அவர்களது பத்திரிகைகளும் இதைப் பற்றி ஒன்றும் பேசக் காணோம். ஒரு பிராமணனைத் தவிர வேறு யாராவது அம் மாதை இந்துவாக்க முயற்சித் திருந்தால் இதற்குள் மழைத் தவளைகளைப் போல் மூலைக் கொரு பக்க மிருந்து கத்துவார்கள். இனி வெள்ளையைக் கறுப்பாக்கச் சங்கராச்சாரியாருக்கே சமத்துவ முண்டென்றும், அதற்கு சாஸ்திரத்தில் இட முண்டென்றும் பேச முன் வந்து விடுவார்கள். இவ்வாறு வேண்டா விஷயங்களை யெல்லாம் வழக்கம் என்ற சொல்லால் மறைத்து ஒரு சில வகுப்பார் தங்கள் சுய நலத்துக்கே உபயோகப்படுத்தி வரும் வழக்கம் நம் பாரத நாட்டில் வெகு ஆழத்தில் வேரூன்றிக் கிடக்கிறது. அதற்கு வெந்நீ ரூற்றி, வேருடன் பிடுங்கி விட வேண்டு மென்று வெகு பேர்கள் முயற்சித்து முடியாம லிருந்து வருகிறது.

## நாடார்களும், தேவஸ்தானக் கமிட்டியும்.

("திராவிடன்" எழுதுவது.)

தஞ்சாவூர் தேவஸ்தானக் கமிட்டியார் 18-ந்தேதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நாடார்களைத் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தவர்களாய் நியமனம் செய்வது மத விரோத மென்றும், அவர்கட்குக் கோயிலுக்குள் நுழைவதற்கே உரிமை கிடையாதென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பி யிருப்பதாய் அறிகின்றோம். தஞ்சை ஜில்லாவில் நாடார்களுக்குக் கோயிலுக்குள் நுழைவதற்கு உரிமையில்லை யென்றும், ஆகையால் அவர்களைக் கமிட்டி அங்கத்தவர்களாய் நியமிப்பது கூடாதென்றும் சொல்வது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதாகும். திரு. பொன்னுசாமி நாடார் என்ற பெரியார் ஒருவர் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியில் 35 ஆண்டுகளாய் அவர் இறக்கும் வரை அங்கத்தவராய் இருந்ததை நாம் அறிவோம். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இந்த மூன்று ஜில்லாக்களிலுள்ள சில கோயில்களில் தவிர, மற்ற எல்லாக்கோயில்களிலும் நாடார்கள் நுழையலாம். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தமட்டில் கோயில்களிலும் மடங்களிலும் நாடார்களுக்கு மிகச் செல்வாக்குண்டு. அதனாலேயே பொறையார் பெருஞ் செல்வர் காலஞ்சென்ற திரு. தவசிமுத்து நாடார் ஒரு லட்சம் ரூபாய் செலவுசெய்து திருமயானம் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்துள்ளார். உண்மை இவ்வாறாக நாடார்களைத் தேவஸ்தானக்கமிட்டி அங்கத்தவர்களாக நியமனம் செய்வது மத விரோதமென்றும், அவர்கட்குத் தஞ்சை ஜில்லாவில் கோயிலில் நுழைய உரிமை இல்லை யென்றும் சொல்வது அக்கிரமல்லவா? புதிதாய் நிறைவேற்றப்பட்ட தேவஸ்தான சட்டப்படி "இந்து" என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும், வோட்டர்களாகவும், கமிட்டி அங்கத்தவர்களாகவும் உரிமை உண்டு என்பதை அரசாங்கத்தாருக்கு அறிவிக்கின்றோம்.

---

ஆயினும் தற் காலச் சக்கரம் அதற்குச் சாவு மணி யடித்துக் கொண்டிருக்கிறது; சுயமரியாதை புனர் ஜென்னமாய் விட்டது. நாட்டுக்கு நலந்தராக் கொடிய வழக்கங்களையெல்லாம் செருப்பால் அடித்து, நாட்டை விட்டுத் துரத்தி விடலா மென்று நம்பிக்கை யுடன் ஞன் திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார். அதைச் சில கோடரிக் காம்புகள் மறுத்தும்வருகின்றன. என்றாலும் இளைஞ ரெழுச்சியால் தக்க பலன் தரக் கூடு மென்றே நம்புகின்றோம்.

ஆலயங்களுக்கு ஆடு, கோழிகளைப் பலி யிடும் கெட்ட வழக்கத்தை அனேகர் கை யாண்டு வருகிறார்கள். அதை விட்டு விட வேண்டு மென்றால் புராதன வழக்க மென்று சொல்கிறார்கள். பலி யிடுதல் புராதன வழக்கந்தானா? எதற்காகப் பலி யிட வேண்டும்? அது தீதா நன்றா? எக் காலத்தில் இக் கொடிய வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்? அதை இன்னும் நாம் செய்து கொண்டு தா னிருக்கவும் வேண்டுமா? என்பதைப் பற்றி மறுமுறை எழுதுவோம். சிவானுபூதிச் செல்வர்களாகிய நாடார் குல மக்கள் யாவரும் வருகிற பங்குனி மாதம் மாரியம்மன் பண்டிகை நாட்களில் ஆடு, கோழிகளைக் கொல்லும் கொடிய வழக்கத்தை அடியோடு நிறுத்தி விடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

---

## திரு. அரங்கநாத முதலியாரும், நாடார்களும்.

சென்னை தேவஸ்தான இலாக்கா மந்திரி கனம் அரங்கநாத முதலியாரும் அவர் சார்ந்துள்ள பிரம்மஞான சங்கத்தாரும் பேசும் சகோதரத்துவம் சமத்துவம் என்ற பேச்சுகளெல்லாம் வெறும் ஏமாற்றங்கள் என்று இப்பொழுது வெளியாகின்றன. பிரம்மஞான சங்கத்தின் தலைவியாய பெசண்டம்மையார் ஆதிதிராவிடர்கள் நாற்றம் பிடித்தவர்கள்; அவர்களைத் தொடக்கூடா தென்றார். அம்மையார் சீடராகிய திரு. அரங்கநாத முதலியாரோ, நாடார்கள் தேவஸ்தானக் கமிட்டியில் அங்கத்தவர்களாய் இருப்பதற்கு அருகதையுடையவர்களா அன்றா என்று தஞ்சாவூர் ஜில்லா தேவஸ்தானக் கமிட்டியை அபிப்பிராயம் கேட்கின்றார். இது அக்கிரமமல்லவா? நாடார்கள் இந்துக்கள். அவர்கட்குத் தஞ்சாவூர்ஜில்லாகோயில்களில் நுழைய உரிமை உண்டு. தேவஸ்தான சட்டத்தில் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வோர் யாவருக்கும் ஓட்டர்களாகவும், கமிட்டி மெம்பர்களாகவும் உரிமையுண்டு. இதை உணர்ந்தும், நாடார் பெருமக்களை அவமானப் படுத்துவதற்காக, தஞ்சை ஜில்லாக் கமிட்டியாரின் அபிப்பிராயத்தை திரு. அரங்கநாத முதலியார் கேட்டது உயர்ந்தசாதி என்ற இறுமாப்பல்லவா? ஜில்லாக் கமிட்டியார் திரு. அரங்கநாத முதலியருக்கு நாடார்களைக் குறித்து அபிப்பிராயம் சொல்லும் அட்வகேட் - ஜெனரல்களா? நாடார்களைக் கமிட்டி அங்கத்தவர்களாய் நியமனம் செய்ய விருப்பமில்லாவிடின், திரு. அரங்கநாத முதலியார் வாளா இருக்கலாமே? அதற்காக ஏன் ஜில்லாக் கமிட்டியையும் கேட்க வேண்டும்? தேவஸ்தானங்களைப் பொறுத்த எல்லா வகைகளுக்கும் அபிப்பிராயம் கேட்க வேண்டிய இடம் தேவஸ்தான போர்டு. அந்த போர்டை விட்டு விட்டு ஜில்லாக் கமிட்டிக்கு ஏன் திரு. முதலியார் தாவ வேண்டும்? ஜில்லாக் கமிட்டியின் பேரில் பழியைப் போட்டு விட்டு ஜெயசித்தராமாக இருந்து ஏமாற்றி விடலா மென்று திரு. முதலியார் கருதினர் போலும்.

இனி நாம் ஜில்லாக் கமிட்டியார் அபிப்பிராயத்தை அன்றே கண்டித்து விட்டோம். நாடார்கள் தேவஸ்தான கமிட்டி அங்கத்தவர்களாய் இருக்கக் கூடாதென்று அன்று பேசிய ஜில்லாக்கமிட்டி அங்கத்தவர்களுள் எவரேனும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக விருப்பின், அத்தகையோர் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பது கட்சிக்கே பெருத்த அவமானமாகும். நாடார் பெருமக்கள் இக்கொடுமையை ராயல் கமிஷனிடம் சொல்லத்தான் போகின்றார்கள்.

---

## தென்காசித்தாலுகா போர்டு எலெக்ஷன்.

நாடார்குல கனவான்களே! கடந்த 1925-ம் வருஷம் நடந்த எலெக்ஷனில் நம்மவர்களில் மூவர் நின்று தோற்றது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வருஷம் குருவன் கோட்டை மகா-ள-ள-ஸ்ரீ க. நயினார் நாடார் அவர்களும், முத்துமாலைபுரம்மகா-ள-ள-ஸ்ரீ பெருமாள் நாடார் அவர்களும் அபேக்ஷகர்களாய் நிற்கப் போவதாய்த் தெரிகிறது. ஆதலால் தாங்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய ஓட்டுரிமையை நம் நலனுக்காக்கி ஷை இருவருக்கும் போலிங் ஸ்டேஷனில் சென்று ஓட் பதிவு செய்யவேண்டுகிறேன். போலிங் ஸ்டேஷன்கள் பாவூர் சத்திரம், ஆலங்குளம், வீரகேரளம்புதூர், ஊத்துமலை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்போகிறார்கள். தங்கள் சோலிகளை பொருட்படுத்தாமல் குல நலங்கோரி ஓட்டுக் கொடுத்து இவ்விரு கனவான்களையும் ஜெயிக்க வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எம். கே. தங்கராத்தின நாடார்,
பாவூர் சத்திரம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மஹாஜன சங்கத்துக்கும், சங்கம் நிர்வாகசபைக்கும் ஓர் வேண்டுகோள்.

### கூட்டுறவு பனிக்கட்டி ஆலை திறக்க ஆலோசனை.

நாடார் சமூக ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் நிதிக்கென்று ஆரம்பித்த லாட்டரி ஒருவாறு வெற்றிபெற்றதன்மூலம் ஸ்காலர்ஷிப் பண்டுக்கு ரூ 40363—13—1 ஒதுக்கி வைக்கப்பெற்றது. இத்தொகையைக்கொண்டு மகாஜன சங்கத்தின் பேருக்கு ஸ்தாவர சங்கம வஸ்துக்கள் வாங்கி அவை மூலம் வரும் வருமானங்கொண்டு மாணவருக்கு பொருட்சகாயம் செய்துவர வேண்டுமென்று முடிவு செய்யலாயிற்று. இவ்விஷயம் நடத்தி வைப்பதற்கு ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பெற்றுள்ளது. ஆயினும் இதுவரையும் கமிட்டி தமது வேலையைச்செய்து முடிக்காமற்போனது அப்பணத்தை வேறு யாதாமொரு விஷயமாய் செலவு செய்ய ஏதுகரமாகுமென்று நம்ப இடமுண்டு. இது நிற்க,

மேனாட்டுக் கைத்தொழில் முறைகளைக் கற்று நமதுநாட்டுக்கு பலன் பெறச் செய்ய வேண்டுமென்ற பேராவலால் மிகுந்த பணச்செலவுசெய்து இந்தியாவைவிட்டு வெளியேறி பல கைத்தொழில்களின் நுட்பங்களையும் நன்கு பயின்று தாய்நாட்டுக்குத் திரும்பி வந்து பனிக்கட்டித்தொழில், சர்க்கரைத்தொழில், சோப்புத்தொழில் முதலியவைகளின் தமது அனுபவத்தை தேசாபிமானத்துடனும் குலாபிமானத்துடனும் "நாடார்குல மித்திர"னில் 1924-ம் ௵ ஜூன் மாதத்திலிருந்து தொடர்ச்சியாய் வெளியிட்டு மகாஜன சங்கத்தையும் நம் சமூகத்தையும் கைத்தொழில் அபிவிருத்தியில் போதிய ஊக்கங்காட்ட வேண்டிக்கொண்ட மாபெருந்தொழிலாளர் ஸ்ரீமான் ராஜா தேவவரம் நாடார். அவர்களேயாவர். மேலும் தொழிற்சாலைகள் கட்டி வைத்து யந்திரங்கள் யாவும் பூட்டி வைப்பதற்கு வேண்டிய உதவிகள் தாமே புரிவதாகவும் வாக்குறுதி செய்தார்கள். நமது நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியில்—விசேஷித்து நாடார்கள் கைத்தொழில் அபிவிருத்தியில்—அன்னவர் சிரமம் நிறைவுறுமற்போனதற்குக் காரணம் நாடார் சமூகம் பராமுகமாயிருந்ததே. பனிக்கட்டி ஆலை ஒன்று ஸ்தாபித்துவிட்டால் ஏறக்குறைய 100 நபர்களுக்காவது வேலை கொடுக்கலாமென்றும், யந்திர விலைக்கும் பூட்டிவைக்கும் செலவுக்கும் கையிருப்பு முதலுக்கும் வேறு சிப்பந்திச் செலவுக்கும் உத்தேசம் ரூ 60000 தான் வேண்டுமென்றும் இதனால் வரும் லாபம் நூற்றுக்கு ஐம்பதுக்கு குறைவில்லை யென்றும் பத்திரிகைவாயிலாய் கூட்டிக்காட்டி உத்தரவாதஞ் செய்ததை நாடார் தனவான்கள் யாவரும் நன்கு கவனிக்கவேண்டும். இவ்வமயம் ரூ 60000 சங்கத்திலிருந்தால் ஒரு பனிக்கட்டி ஆலை சலபமாக முடித்துவிடலாம். இக்கைங்கிரியம் முடிவுறும் பொருட்டு தனம் தேவவரம் நாடார் அவர்களும் வேண்டிய ஒத்தாசை செய்வார்கள் என்று திண்ணமாய்ச் சொல்லலாம். சங்கத்தில் கையிருப்பு ரூபாய் உத்தேசம் 40000 போக ரூ 20000 தேவையிருக்கிறது. இதற்காக நாம் சற்றும் கவலைப்படவேண்டுவதில்லை. கூட்டுறவு தொழிற்சாலை முறைப்படி ஆலையை ஆரம்பித்து விட்டால் எடுத்த காரியம் எளிதில் முடியும். ரூ 40000 சங்கத்தின் பேரிலும் மீதி ரூ 20000 த்துக்கும் பங்கு ஒன்றுக்கு ரூ 1000 வீதம் 200 பங்குகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். பலரும் பங்காளர்களாகும் பொருட்டு பங்குத்தொகையை ரூ 50 தாகவோ 25 தாகவோ குறைத்தாலும் பொருந்தும். கிடைக்கும் லாபத்தை வருடந்தோறும் பங்காளர்களுக்கு வீதித்துக் கொடுத்துவிட்டு மீதி ரூ 40000 த்துக்கும் சங்கத்துக்குச் செல்லவேண்டும் லாபத்தை ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப்புக்கு வீதித்துக் கொடுத்துவலாம். தனம் தேவவரம் நாடார் அவர்கள் கூறியது போல் மிகுந்த லாபவருவாயிருந்தால் ஸ்காலர்ஷிப்புகளைக் கூட்டவோ லாபத்தை பல் வேறு நல்வழிகளில் உபயோகப்படுத்தவோ செய்யலாம்.

எதுக்கும் சமயத்துக்கேற்ப இது ஓர் சிறந்த உபாயமேயாகும். ஆகவின் மகாஜன சங்கமும் நாடார்குல மேதாவிகளும் இதை உய்த்துணர்ந்து காரிய வெற்றிக்கு கச்சைகட்ட முன் வருவார்களென எதிர்பார்க்கின்றோம். அடுத்துக் கூடும் நாடார் மகாஜன சங்கம் கௌன்ஸில் மீட்டிங்கில் இவ்விஷயத்தை ஆலோசனைக்கு எடுக்கும்படி கௌன்ஸிலை வேண்டிக்கொள்ளுகிறோம். நமது காரிய சாதனைக்கு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம். சுபம்.

ஸி. தங்கையா நாடார்,
தென் திருவிதாங்கூர்.

## மகாத்மா மரண காலம்.

### அவர் கூறும் விபரம்.

மகாத்மாகாந்தி தாம் மார்ச்சு மாதம் 12-ந் தேதி இறந்துவிடப் போவதாகச் சொன்னதாகவும் அதனால் அவர் நம்பிக்கை இழந்த நிலைமையிலிருப்பதாகவும் அவருக்கு அவரே ஒரு ஜோஸ்யர் என்றும் பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பது சம்மந்தமாக மகாத்மா "யங் இந்தியா"வில் எழுதுவதாவது:— நான் ஒரு ஜோஸ்யரல்லவென்பதை முதலில் எனது நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு அந்த சாஸ்திரத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நான் நம்பிக்கையை இழக்கவேயில்லை. எனக்கும் அதற்கும் வெகு தூரம். ஆனால் நடந்த விஷயமென்ன வென்றால், ஆறு வருஷங்களுக்கு முன்பு நான் தண்டனையடைந்த பொழுது இந்தியாவுக்கு சுயராஜ்யம் எப்பொழுது கிடைக்குமென்று என்னைச் சிலர் கேட்டார்கள். அப்போது நான் ஆறு வருஷங்களுக்குள் சுயராஜ்யம் கிடைக்குமென்றும் அல்லது அதற்குள் நானாவது இறக்க வேண்டுமென்றும் அந்த ஆறுவருஷ காலமே அதிகமென்றும் கூறினேன். இந்தியா அக்காலத்திலிருந்த நிலைமையை உத்தேசித்து இவ்விதம் கூறினேன். அன்று முதல் இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக என்னுடைய சொந்த ஹோதாவில் என்னாலியன்ற முயற்சிசெய்து வந்தேன். பின்பு 1920-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு சுயராஜ்யம் ஒரு வருஷத்துக்குள் கிடைத்துவிடுமென்று கூறினேன். அந்தக் காலத்துக்குள் சுயராஜ்யம் கிடைக்காததற்காகப் பலர் சிரித்தனர். ஆனால் அவ்வருஷ முடிவில் ஆமதாபாத்தில் தேசிய காங்கிரஸ் கூடியபோது, நான் சட்டப்படி நமக்கு சுயராஜ்யம் கிடைக்காவிட்டாலும் தேசத்தில் சுயராஜ்ய மனோபாவமும், பல வகுப்புகளுக்குள் ஒற்றுமையும் ஏற்பட்டிருப்பதாகவும், கல்கத்தா காங்கிரஸ் நாகபுரி காங்கிரஸ் நிபந்தனைகளை நிறைவேற்றியிருந்தால் ஒரு வருஷத்துக்குள் சட்டப்படி சுயராஜ்யம் கிடைத்திருக்குமென்றும் சொன்னேன். அந்த ஒரு வருஷத்துக்குள் சட்டப்படி சுயராஜ்யம் கிடைக்கவில்லை. அந்த ஒரு வருஷம் கழிந்தது போல நான் கூறிய ஆறுவருஷ காலமும் முடிவடையப் போகிறது. அப்படியிருந்தும் நான் அப்போதிருந்தது போலவே இப்போதும் நம்பிக்கையை யிழந்துவிடாமல் இருந்து வருகிறேன். ஆனால் 6 வருஷ முடிவு இந்த மார்ச்சுமாதம் 18-ந்தேதியோடு முடிவடைகிறதே யொழிய 12-ந் தேதியோடு முடிவடையவில்லை. அந்த தேதியில் எனது தேகம் கெட்டுப் போகும்படி நான் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. அத்துடன் நான் எனது தேகம் நல்ல நிலைமையிலிருப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து வருகிறேன். மேலும் வருகிற கோடைகாலத்திலும் மழைகாலத்திலும் சில வேலைகள் செய்வதென ஏற்கனவே தீர்மானித்திருக்கிறேன்.

## செய்தித்திரட்டு.

பாரிஸில் 20 வயதுக்குள்பட்ட காயத்திரி என்ற ஓர் இந்து நாடகப்பெண் அக்கரிலிருந்து கானஸ் என்னும் இடத்திற்கு 590 மைல் தூரமுள்ள குதிரைச் சவாரிப் பந்தயத்தில் வெற்றியடைந்தாள். சாதாரணமாகப் பெண்கள் 30 மைல் தூரம் தான் ஒரு நாளைக்கு சவாரி செய்யமுடியும். இவளுடன் போட்டியில் கலந்துகொண்ட ஸ்திரீகள் மிகவும் களைத்துப் போனார்கள். இவள் களைக்கவில்லை.

* *

மாஜி இந்தூர் மகாராஜா மணக்கவிருக்கும் ஸ்ரீமதி மில்லர் வெள்ளை மாது இந்து மதம் ஏற்றுக் கொண்டார். நாளிது மார்ச்சு மீ 8 ௳ மதமாற்றச் சடங்குகள் காவீர பீடத் தலைவர் டாக்டர் குர்த்த கோடி சங்கராச்சாரியாரின் முன்னிலையில் நடைபெறும். இருவருக்கும் விவாகம் இந்தூருக்கு சமீபமாயுள்ள பார்வேய் என்னுமிடத்தில் நாளிது மார்ச்சு மீ 12-௳ நடைபெறும்.

* *

நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி கைத்தொழில் காட்சி சாலையைப் பார்வையிடும் சமயத்து இந்திய சுருட்டுகளை ஆச்சரியமாய்ப் பார்த்து அவைகள் நன்றாயிருக்கின்றனவா என்று கேட்டார். தாம் சுருட்டுக்குடித்துப் பழக்கமில்லை யென்றும், அப்பழக்கமிருந்தால் தாம் குடித்துப் பார்ப்பர் என்பதாகவும் சொன்னார்.

* *

அமெரிக்கா ஸெனட் சபையார் பிறநாட்டு சொத்து மசோதா என்ற மசோதாவை நிறை வேற்றி விட்டதால் யுத்தகாலத்தில் ஜெர்மனியிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்திற்காக 20 கோடி பவுன் ஜெர்மனிக்கு அமெரிக்காவிடமிருந்து கிடைக்கும்.

* *

பிரஞ்சு தேசத்திற்குப் புதிய பிரிட்டிஷ் ஸ்தானாபதி ஸ்ரீ வில்லியம் டிர்ரல் நியமிக்கப்பட்டிருப்பதன் சம்பந்தமாக ஜெர்மன் பத்திரிகைகள் கண்டித் தெழுதுகின்றன. காரணம், அவர் கொள்கை ஜெர்மன் கொள்கைகளுக்கு நேர் விரோதமானதென்றும், அவர் பிரஞ்சுதேச நன்மைக்கே பாடுபடுவாரென்பதுந்தான். ஆனால் ஜெர்மானிய அரசாங்க அறிக்கை அதை மறுத்து விடையளித்திருக்கிறது.

* *

ஆப்கன் அமீர் அமனுல்லாகான் ஜெர்மனிக்கு விஜயஞ் செய்த தன் ஞாபகார்த்தமாக அவருக்கு ஜெர்மன் சர்க்கார் 10 பேர்கள் பிரயாணம் செய்யக் கூடிய ஒரு ஆகாய விமானம் அளித்திருக்கின்றனர்.

* *

ஜெர்மன் மாஜி கெய்ஸர் மைத்துனர் சௌபிக்காட் ஒரு ஜெர்மன் வாலிபன் மீது வண்டியை ஏற்றி விட்டதற்காகக் கைதியாகி போலீஸில் தன் விலாசம் கொடுத்து விடுதலையாகிய பின்னர் எடுத்துக்கொண்ட போலீஸ் விசாரணையில் இவர் ருஷிய தேசத்தைச் சேர்ந்தவரென்றும், இவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஜெர்மன் பிரயாண அனுமதி 1927-ம் வருடம் டிசம்பர் மாதத்துடனேயே முடிவாகி விட்டதென்றும் தெரியவரவே மாஜிஸ்ட்ரேட் 300 மார்க்குகள் (ஜெர்மன் நாணயம்) அபராதம் விதித்தார்.

* *

ஆரிய சமாஜி பிரசாரகர் சுவாமி சத்தியானந்தரை கத்தியால் குத்திக்கொல்ல முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு லாகூரில் 14 வருஷங் கடுங்காவல் தண்டனை யடைந்து ஜெயிலிருந்துவரும் அப்துல் அஸீஸ் என்னும் முகமதியர் ஜெயில் அதிகாரிகள் மூலமாய் அப்பீல்செய்ய, அப்பீல் நீதிபதி ஸ்ரீ பிராட்வேயினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

* *

பம்பாயில் ஒருவன் தனது மனைவியை அடிக்கடி அவள் தாய்வீட்டுக்குப் போகக் கூடாதென்று கண்டித்தும் அவள் மீறிப்போய்க் கொண்டிருந்த காரணத்தால் அவன் அவளை கட்டித் தூக்கி அடித்ததாகவும் அவளழுகுரலைக் கேட்ட அவன் சகோதரன் வந்து இடையே மிறக்கிவிட்டதாகவும் பின் வழக்குத் தொடுத்ததாகவும் விசாரணையில் கணவன் ஒருவருடங் கடுங்காவல் தண்டனை யடைந்ததாகவும் தெரிகிறது.

* *

1926-ம் வருடத்துடன் 44 வருஷ காலமாக கோலார் தங்க வயலில் 15136954 ராத்தல் எடையுள்ள தங்கம் வெட்டி யெடுக்கப் பட்டிருக்கிறது. பங்குதாரர்களுக்கு 232348 பவுன்கள் பங்கிடப் பட்டிருக்கின்றன. மைசூர் சர்க்காருக்குக் கப்பமாக 44,52,607 பவுன்கள் செலுத்தப்பட்டிருக்கின்றன. இதன் வேலைகளுக்காகச் செலவு மிகக் குறைந்திருக்கிறது.

* *

டோக்கியா நகரிலிருந்து 85 மைல் தூரத்திலிருப்பதும், ஜப்பானுக்குள் மிகவும் கடுமையானதுமான அஸமா சமியெனும் எரிமலை சென்ற 8 வருஷங்களாக ஓய்ந்திருந்து சமீபத்தில் மீண்டும் திடீரென்று எரி குழம்பைக் கக்க ஆரம்பித்துவிட்டது. சுற்றுக் கிராமங்களுக்கு அதிக பொருட்சேதம் மேற்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

* *

கோயம்புத்தூரில் குருவாயி என்பவள் தனது புருஷன் கிராமத்திற்குப் போக மறுத்ததால் புருஷன் கோபங்கொண்டு அவளைக் குத்திக்கொன்றுவிட 6 வருடங் கடுங்காவல் தண்டனையடைந்தான்.

* *

ஹைதராபாத்தில் தான்தோதாம் என்னுமூரில் புருஷனும் மனைவியும் அவர்கள் வீட்டின் மாடியின் மேல் தூங்கிக் கொண்டிருந்தபொழுது அம்மாடி திடீரென்று விழுந்து விட்டபடியால் அவர்களிருவரும் அக்கணமே யிறந்து போனார்கள்.

* *

அயர்லாந்து தேசியக் கட்சித் தலைவரான வில்லியம் ஒடீன் காலமானார்.

* *

வாணியம்பாடியில் ஒரு குரங்கு தன் குட்டி இறந்ததால் மிகவும் வருந்தப்பட்டு அதை எடுத்துக்கொண்டு வீடுதோறும், கடைதோறும், பேட்டைதோறும் மனிதனைப்போல் கடந்து செ[illegible] எல்லோருக்கும் இரக்கம் உண்[illegible] மனி[illegible]ப்போல் ஓ வென்று கண்ணீர் [illegible]ட்டுக் கதறியது. பிணத்தை புரட்டி புரட்டிக் காண்பித்தது. தின்பதற்கு [illegible]ம் கொடுத்ததற்கு அது தலையை ஆட்டி வேண்டாமென்று சாடை செய்தது. துண்டு துணி கொடுத்ததற்கு அவைகளைக் குட்டியின் பிணத்தின்மேல் சுற்றிக் கொண்டது. இக்குரங்கின் பரிதாபத்தைக் கண்டு எல்லோரும் ஆத்திரமும் ஆச்சரியமும் பட்டார்கள். என்னே விந்தை!

* *

இன்னும் 10 வருஷங்களுக்குள் உலகிலிருந்து குஷ்ட ரோகத்தை வெருட்டி விடுவதற்கு ஒரு தைலத்தைக் கண்டு பிடித்திருப்பதாக பிரிட்டிஷ் சாதிபத்திய குஷ்ட ரோக நிவாரண சங்கத்தாரின் வருஷாந்த அறிக்கையி லிருந்து தெரிகிறது. ஹைட்னோகார்ப்பஸ் என்னும் ஒரு மரத்தின் பழங்களைக் காய வைத்து, அவைகளிலிருந்து இந்தத் தைலத்தை இறக்குவதாகவும், இதுவரையில் லட்சம் டோஸ் மருந்து அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. ஒரு குஷ்ட ரோகிக்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய தைலத்தை இறக்குவதற்கு 2 ஷில்லிங், 6 பென்ஸ் தான் செலவாகிறதென்றும், தைலத்தை இறக்குவதற்கு புதிய முறையை அனுஷ்டிப்பதன் பயனாக இந்தச் செலவு 3½ பென்ஸாகக் குறைந்து விடலாமென்று எதிர் பார்க்கப்படுகிற தென்றும் சொல்லப்படுகிறது. குஷ்ட ரோகத்தை இந்தத் தைலம் நிவர்த்தி செய்து விடக்கூடுமாயின் இதைக் கண்டு பிடித்தவர்கள் உலகினரின் நன்றிக்குப் பாத்திரமானவர்களென்றே சொல்ல வேண்டும்.

## நமது அதிபர்.

மூன்று நாட்களாகத் தமது சொந்தக் காரியமாக விருதுநகர், சாத்தூர், மதுரை முதலிய இடங்களுக்குச் சென்றிருந்த நமது ஆசிரியர் நேற்று மாலை வந்து சேர்ந்துளார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அருளுடைமை.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 17-வது பிரசுரம்.)

அரிதாகிய மானிட யாக்கையைப் பெற்ற நாம், அருளுடையோராயிருக்க வேண்டியது அவசியம். மானிட சரீரம் கிடைப்பதே, பூர்வ ஜென்மங்கள் பல வற்றிலும் புண்ணிய கர்மங்களைச் செய்து அதனால் நன்மை மிகுந்து, பாவம் குறைந்து கடவுளையறியும் அறிவாகிய பக்குவ மேம்பட்டிருக்கும் கால மென்பது நூல்களின் துணிபு. அரிதிற்பெற்ற மானிட யாக்கையை நல் வழியில் பயன்படுத்தினால் கடவுள் பக்தியும், பாச வைராக்கியமும், தத்துவாதீதமான பரம் பொருளை அடையும் மார்க்கமும் சித்திக்கும். தீய வழியில் செலுத்தினால் இம்மையில் வறுமை, பிணி, துன்பம் முதலியவைகளால் நலிந்து நரகத்தையுடைய வேண்டியது வரும். ஆகையால் ஒவ்வொருவரும் நன்மையான வழியில் செல்வதே நன்மை தரும். அந் நன்மையும், இல்வாழ்க்கையைக் கைக்கொண்டு நடத்துவதாலேயே கிடைக்கும். அது பற்றியன்றோ "இல்லற மல்லது நல்லற மில்லை" என்றார் நமது ஔவை மூதாட்டியாரும்!

இல் வாழ்க்கையை நடத்தும் நாம் கொள்ளத் தக்கதும் தள்ளத்தக்கதுமாக சில விதிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், அன்பும், அறமும் கொள்ளத் தக்கனவாம். அது பற்றியே

அன்பும் அறனும் உடைத்தாயின் இல் [வாழ்க்கை
பண்பும் பயனு மது.

என்றார் நந் தெய்வப் புலவரும். அன்பும், அறமுந் தலைமையாய்க் கொண்ட இல் வாழ்க்கையானது அருளை வழங்குகிறது என்பது அனுபவம். "அருளென்னும் அன்பீன் குழவி" என்றார் நாயனார். இனி தள்ளத்தக்க தெதுவெனின், கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்ச மகா பாதகங்களாம். இவைகளில் எது ஒன்றிருந்தாலும் மற்றவைகளும் அவ்விடத்தே தோன்றிவிடும். இவைகளை அன்பர்கள் வான்றி நோக்கின் உண்மை புலனாகும்.

அன்பானது மனிதர்களின் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்துவதோடல்லாமல் அருளையும் வழங்குவ தென்பதைக் கண்டோம். அருளுடைமையானது இன்னும் பல நன்மைகளை நல்குவதாயு மிருக்கிறது.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை
இருள் சேர்ந்த இன்னா வுலக புகல்

என்றும்,

மன்னுயிரோம்பி அருளாள் வார்க் கில் [லென்ப
தன்னுயிரஞ்சும் வினை என்றும்

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறுதல் கண்டோர், அருளுடைமையே ஆதாரவாய்க் கொண்டிருப்பதன்றி இருளுடைமையும் கீழ்மையுமாகிய கொலைத் தொழிலால் வரும் புலாலுண்டு களித்து மயங்குவரோ? மயங்கார்! மயங்கார்!!

அன்புடையீர்! தமிழ் வேதம் முழக்கும் ஒழுக்கங்களில் சிறந்ததாகிய அன்பும், அருளும் உடையோராய் வாழ்வதால் இன்பம் நிறைந்த வுலக வாழ்வு, அதாவது, நரகலோக வாழ்வு இல்லை யென்று பெறப்படுவதால் அஃதில்லா விடத்துக் கிடைப்பது நரகவாழ்வு என்பது நிச்சயம். ஆதலால் நாம் எல்லோரும் புலாலுணவை நீக்கி சத்துவ குணத்தை நல்கும் மரக்கறி உணவைக் கொண்டு நல் வாழ்வு பெற முயலுவோம்.

---

எவ் வுயி ருக்கும்
அன்பா யிரு.

---

## உபவாச மருந்து

### செலவில்லா இயற்கை வைத்தியம்.

### உடம்பிலிருந்து விஷத்தைக் கழித்தல்.

விக்டர் டேன் என்பார் ஆங்கிலப் பத்திரிகை யொன்றில் எழுதுவதின் சாரம் வருமாறு:—

பண்டைக் காலத்திலே உபவாசம் ஒரு சிறந்த வைத்திய முறையாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. எகிப்திலும் இந்தியாவிலும் முற்காலத்தில் தேகா ரோக்கியத்துக்காக அடிக்கடி உபவாச மிருக்கும் வழக்கம்பரவியிருந்தது. ஹிப்ரு சாதியான் ஒவ்வொரு வாரமும் இரண்டு முறை சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை உபவாசமிருக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளான். வைத்திய சாஸ்திரத்தின் தந்தை என்று சொல்லப்படும் ஹிப்பாகிரேட்ஸ் என்பார் "சுரம் நீங்கப் பெற்றவனுக்கு உணவு கொடுத்தால் அவன் பலம் பெறுவான்; ஆனால் சுரம் இருக்கும்போதே உணவளித்தால் நோய் அதிக மாகும்" என்று தனது சூத்திரமொன்றில் சொல்கிறார். பசி யடுப்பது ஒரு பெரிய தீமை என்பதாக இக்காலத்தில் ஜனங்கள் நினைக்கிறார்கள். இந்த மூடக் கொள்கையைச் சாதாரணமாய் டாக்டர்களும் ஆதரிக்கிறார்கள். ஆனால் தற்கால டாக்டர்களில் சிலர் உபவாசத்தின் பயனை அறிந்து அதைக் கைக்கொள்ளும்படி நோயாளிகளுக்குச் சொல்கிறார்கள் என்பதையும் குறிப்பிடவேண்டும்.

உபவாசம் என்பது ஓர் இயற்கை முறையாகும். இதனால் தேகம் தன்னைத்தானே குணம் செய்து கொள்ளுதல் சாத்தியமாகிறது. மிருகங்களுக்கு நோய்வந்தால் அவை தீனி யெடுப்பதில்லை யென்பதைப் பலர் கவனித்திருக்கலாம். சொந்தக்காரன் மிருகங்களின் இயல்பு அறிந்தவனாயிருந்தால் அப்போது அவற்றிற்குத் தீனி கொடுப்பதில்லை. அது, நோய் குணமாவதற்கு அவை கைக் கொள்ளும் இயற்கை முறை யென்பது அவனுக்குத் தெரியும். மனிதர்களுக்கும் இவ்வாறுதான். நோய் குணமாவதற்கு உபவாசத்தைப் போல் சிறந்த, செலவில்லாத வைத்திய முறை வேறு கிடையாது.

உடலுக்குப் பலமும், ஜீவசக்தியும் அளிப்பது உணவும் பானமுமே என்னும் பொய்யை முதலில் அடியோடு மறந்து விடுங்கள். அதை மறந்து விட்டுப் பின்னர் மேலே இக் கட்டுரையைப் படியுங்கள். நோய் எதனால் வருகிறது? எல்லா நோய்களுக்கும் காரணம் உடம்பில் அன்னியப் பொருள் சேர்ந்து விடுதலேயாகும். நாளாக ஆக இவ்வன்னியப் பொருள் அதிகமாகி விடுகிறது. கடைசியில் மனிதன் சாகிறான். அப்போது அதற்குக் காரணமான நோய் என்று வைத்தின் பாஷையில் நீளமான பெயர் ஏதேனும் சொல்லப்படுகிறது. ஆகவே நோய் குணமாக வேண்டுமானால் யாது செய்ய வேண்டும்? உணவு சரியாகச் செரிப்பதற்கு முயன்று கொண்டிருப்பதற்குப் பதிலாக, உபவாசத்தினால் உடம்பின் உட்கருவிகளுக்கு ஓய்வு கொடுத்து, உடம்பில் சேர்ந்திருக்கும் விஷத்தை வெளியே தள்ள அவகாசம் அளிக்கவேண்டும்.

உபவாசம் நினைத்தபோது ஆரம்பித்து நினைத்தபோது நிறுத்திவிடலாம் என்று சிலர் சொல்வார்கள். நான் அப்படிக் கருதவில்லை. சுரம் முதலிய கடும் நோய்கள் வந்தால், இயற்கையானது விஷத்தை வெளியே தள்ள ஆரம்பித்து விட்டதென்று பொருள். எனவே உடனே சாப்பாட்டை நிறுத்தி நோய் தீர்ந்ததும் சாப்பிட ஆரம்பித்தல் வேண்டும்.

ஆனால் நாட்பட்ட மெதுவான நோய்களின் விஷயம் வேறு. இத்தகைய நோய்களில் ஜீரணக்கருவிகள் பெரிதும் கெட்டுப் போயிருக்கும். ஆகவே, உபவாசத்துக்கு முன் அவற்றைச் சரியான நிலைமைக்குக் கொண்டு வருவதற்காகச் சிறிது காலம் அரை வயிறு சாப்பிட்டு வரவேண்டும். உணவை நன்ருக மென்று, மென்று தின்ன மறந்துவிடக்கூடாது. இப்படிச் செய்து வரும்போது, பசி அடியோடு மந்தித்துப் போய், உணவைக் கண்டாலே வெறுப்புண்டாகும் காலம் வரும். நாவில் அழுக்கு அதிகம் சேரும். சோர்வு உண்டாகும். இப்போது பூரண உபவாசம் தொடங்கவேண்டும். இந்த அடையாளங்கள், 26 அடி நீளமுள்ள ஜீரணக் குழாயானது விஷத்தை வெளியேற்றும் வேலை தொடங்கத் தயாராயிருக்கிறதென்பதைக் காட்டுகின்றன.

மனத்திற்கு அதிகமான உழைப்புள்ள காலத்தில் உபவாசமிருத்தல் மிகவும் நல்லது. இதனால் மூளை தெளிவடைந்து சுறு சுறுப்பாக வேலை செய்யும். ஆனால் சாப்பாட்டில் அதிகமான ஆசையிருக்கும் போது உபவாசமிருத்தல் அவ்வளவு நல்லதன்று. ஏனெனில் அந்த ஆசையை அடக்குவதற்குத் தேவையான மனோமுயற்சியானது கெடுதலை உண்டு பண்ணக்கூடும். ஆதலின் முதலில் மனத்தை நிம்மதியான நிலைக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

உபவாசத்தின் முதல் சில தினங்கள் தான் மிகவும் கஷ்டமாயிருக்கும். ஒரு நண்பனின் உதாரணத்தையோ, அல்லது இம்மாதிரி ஒரு கட்டுரையையோ பார்த்து உபவாசம் தொடங்கியவர்கள் பலர் இரண்டு நாள் ஆவதற்குள் அதைக் கைவிட்டிருக்கிறார்கள். இவர்கள் மனோதிடம் இல்லாதவர்கள். சாப்பிடுதல் என்பது எல்லா வழக்கங்களிலும் முதன்மையானதும் பழமையானது மானபடியால் அதை நிறுத்துதல் கொஞ்சம் சிரமந்தான். முதல் மூன்று நாலு நாள் நிரம்பக் கஷ்டமாயிருக்கும்; தலைவலி ஏற்படக்கூடும்; மிகுந்த சோர்வும் உண்டாகும். ஆனால் அந்நாலு நாளைக் கடந்துவிட்டால் அப்புறம் சுலபமாய் விடும். நாளடைவில் உணவில் ஆசையே அற்றுப்போய்விடும்.

உபவாச மிருக்குங்கால் ஒருவனுடைய மனோ நிலை குறிப்பிடத்தக்கதாகும். அப்போது அகங்காரம் என்பது அடியோடு போய் விடுகிறது. கவிகள் வர்ணிப்பது போன்ற தூய அன்பு எல்லாரிடத்தும் உண்டாகிறது. அறிவு தெளிவடைந்து எவ்வளவு நுட்பமான விஷயத்தையும் உடனே தெரிந்து கொள்கிறது. உய்த்துணரும் சக்தி மிகுதிப்படுகிறது. சில சமயம் தூரத்தில் நிகழும் சம்பவங்களை அறியும் நுட்ப உணர்வும் ஏற்படுகிறது.

இனி, உடம்பின் நிலையைக் கவனிப்போம். உடம்பிலுள்ள அன்னியப் பொருள்களெல்லாம் கழிக்கப்படுகின்ற படியால் ஏப்பம், வயிற்றில் இரைச்சல் முதலியவை உண்டாகும். வாயில் துர்நாற்றமும் ஏற்படலாம். எனிமாவினால் குடலைக் கழுவுதல் மிகவும் அவசியம். வெது வெதுப்பான வெந்நீரை உபயோகிக்க வேண்டும். குடல்களில் சேர்ந்துள்ள அன்னியப் பொருளே மிகவும் நஞ்சுடையதாதலால் இஃது இன்றியமையாததாகும்.

உடம்பில் வெப்பம் அதிகமாதலும், குறைதலும் இயற்கையாதலின் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. வாயில் உமிழ்நீர் அதிகம் சுரக்கும். அடிக்கடி வாயைச் சுத்தம் செய்தல் வேண்டும். கல்லீரல் வீக்கம் இருந்தால், பித்த நீர் ஓக்காளம் ஏற்படும். இவற்றினாலெல்லாம் அபாயம் இல்லையாயினும் நோயாளிகளுக்குப் பயம் உண்டாகக்கூடும். ஆதலின் அநுபவசாலி யொருவரின் மேற் பார்வையில் உபவாச மிருத்தலே நல்லது. உமக்குப் பயமாயிருந்தால் உபவாசத்தை ஒரு நாளும் கைக் கொள்ளாதீர். பயத்தைப் போல் உடம்மை விஷமாக்குவது வேறொன்றுமில்லை.

உபவாசம் பட்டினியன்று; பட்டினி உடம்பை அறுக்கும்; உபவாசம் உடலை வளர்க்கும். தினம் ஆறுவேளை சாப்பிட்ட போதிலும், சாப்பாட்டில் சத்து இல்லாவிடில் நீர் பட்டினி கிடப்பவரேயாவீர். உபவாசம் இத்தகையதன்று. அஃது உடலைச் சுத்தம் செய்து அதற்குப் புத்துயிர் அளிக்கும் இயற்கை முறையாகும்.

உபவாசத்துக்கு முன்பும், உபவாசத்தின்போதும் அனுசரிக்க வேண்டிய விதிகளை விட, உபவாசத்திற்குப் பின் உணவு கொள்வதைப் பற்றிய விதிகள் மிகவும் முக்கியமானவை.

## நோட்டீஸ்.

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை தாலுகா கோபாலபுரம் கிராமத்திலிருக்கும் மீ. சுப்பாரெட்டியார்மகன் மீனுக்ஷி ரெட்டியார் 1, ஷையூர் ரா. சி. வால்குருவாரெட்டியார் மகன் சிங்கமரெட்டியார் 2-இரண்டு பேர்களும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறதென்னவென்ருல்:—

14-12-27-ல் ஷை தாலுகா அயன் ரெட்டியாபட்டி கிராமத்திலிருக்கும் ரு. நாராயண ரெட்டியார்மகன் ராமசாமிரெட்டி 1, ஷையார் சுவிதார புத்திரன்ராமசாமிரெட்டியார் 2, மாரிரெட்டியார்மகன் ருத்திரப்பரெட்டியார் 3, செ. ராமசாமிரெட்டியார் மகன் வாலகுருவாரெட்டியார் 4, ஷையார் தம்பி, ருத்திரப்பரெட்டியார் 5, சாத்தூர்தாலுகா பெரியபேராளி கிராமத்திலிருக்கும் சுப்பாரெட்டியார்மகன், புரிவிட்டை யென்ற வெங்கிட்டரெட்டியார் 6-ஆறுபேர்களும் எங்களிருவர்களையும் ஆயுதங்களை வைத்துக் கொண்டு பலாத்காரம் செய்து வெற்றுக் கடிதங்களில் எங்களிருவர்களின் இடது கைப்பெருவிரல் ரேகைகளை ஆறேழுதடவைகள் தனித்தனிவாங்கியிருக்கிறார்களென்றும், அதற்காக அவர்களின் பெயரில் கிரிமினல் நடபடிக்கைகள் நடத்திக்கொண்டிருக்கிறோமென்றும், ஷை காகிதங்களைப்பூர்த்தி செய்து எங்கள் பேரில் ஏதாவது வெண்ணிலைப் பத்திரங்களோ நோட்டுகளோ ரசீதுகளோ எழுதினால் அது செல்லாதென்றும், அவைகளை யாராவது மேடோபர்வாங்கினாலும் அல்லது தங்கள் பெயரிலேயே தஸ்தாவேஜுகள் எழுதிக்கொண்டாலும் அவைகள் செல்லாதென்றும், நாங்கள் கையெழுத்துப் போடுகிறவர்களென்றும், ரிஜிஸ்தராபீசில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதைத் தவிர மற்ற எந்த தஸ்தாவேஜுகளுக்கும் ரேகை வைத்திருப்பதில்லை யென்றும் இதன் மூலம் தெரிவிக்கிறோம்.

சு. மீனுக்ஷி ரெட்டியார்,
சிங்கம் ரெட்டியார்.

---

முதல் நாள் காலையில் நிரம்பக் கொஞ்சமாய்ச் சாப்பிடவேண்டும். உதாரணமாக ஒரு திராட்சைப் பழம் சாப்பிடலாம். மாலையில் ஓர் ஆரஞ்சுப் பழமும், இரண்டொரு பேரீச்சம்பழமும் அருந்தலாம். மூன்றாம்நாள் சிறிது பால் அருந்தத் தொடங்கலாம். இவ்வாறு கொஞ்சங் கொஞ்சமாய் அதிகப்படுத்தி வழக்கமான உணவுக்குக் கொண்டுவரவேண்டும்.

வாலிபர்களும் சரி, வயதானவர்களும் சரி தாங்கள் சுகமா யிருப்பதாய்க் கருதினாலும், நோய்ப்பட்டிருப்பதாய் எண்ணினாலும் அடிக்கடி உபவாச மிருத்தல் நலம். நான்கு மாதத்திற்கு ஒரு முறை மூன்று நாள் உபவாச மிருப்பதும், மூன்று வருஷத்திற்கு ஒரு முறை இரண்டு வாரம் உபவாச மிருப்பதும் மிகவும் நல்ல யோசனை. உணவு விஷயத்தில் நாம் எவ்வளவுதான் ஜாக்கிரதையாயிருந்தாலும், அடிக்கடி வரம்பு மீறிப்போகாதிருக்கமுடியாது. ஆதலின் மேற்படி உபவாசமுறை எவருக்கும் நன்மை பயக்கும்.

எல்லாவற்றையும் விட மனம் முக்கியமானது. நம்மில் பலர் ஓயாது வயிற்றைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனாலேயே அஜீரணம் உண்டாகிவிடும். உமது நாவிற்குச் சுவையான ஏதேனும் ஒரு பண்டத்தைப் புசித்துக் கொண்டிருக்குங்கால், "இதனால் ஏதேனும் தீங்கு நேரிடுமோ?" என்று எண்ணிக் கொண்டிருக்கவேண்டாம். அப்படி எண்ணினால் நீர் நோய்வாய்ப் படுதல் உறுதி. உமது வயிறு நல்ல நிலையிலிருந்து, நீர் அதைப் பற்றி அதிகம் கவலைப்படாதிருந்தால் அதிக கெடுதி நேரிடாமற் போகலாம். ஒவ்வொரு முறை உணவருந்தும்போதும், அதனால் உமக்கு ஏற்படக் கூடிய நன்மையைப் பற்றியே எண்ணும்; உலகில் மிகச்சிறந்த உணவு அதுவே யென்று நினையும்; அத்துடன் அடிக்கடி உபவாசத்தினால் உடம்பைச் சுத்தம் செய்து வந்தால் நோயற்ற வாழ்வு நடத்தலாம்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மூன்றும் அத்தியாயம்.

### இந்தியர் வருகை.

சென்ற அத்தியாயத்தில் ஆங்கிலேயர் எப்படித் தென்னுப்பிரிக்காவுக்கு வந்தார்கள் என்று பார்த்தோம். அவர்கள் நேட்டாலில் குடியேறி ஸூலு சாதியாரிடமிருந்து சில உரிமைகளைப் பெற்றார்கள். மிகச் சிறந்த கரும்பும், தேயிலையும், காப்பியும் நேட்டாலில் பயிர் செய்யலாம் என்று அவர்கள் கண்டார்கள். இத்தகைய பயிர்கள் ஏராளமாகச் செய்வதற்கு ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேண்டும். அங்கு குடியேறிய ஒரு சில ஆங்கிலேயரால் அஃது ஆகாதென்று சொல்லவேண்டியதில்லை. எனவே, அவர் நீகிரோவரை வேலை செய்யப் பண்ணுவதற்காக முதலில் ஆசை காட்டினார்கள்; பின்னர் பயமுறுத்தினார்கள். ஒன்றிலும் பயனில்லை. இதற்கு முன்பே, அடிமைப்படுத்தி வேலை வாங்கும் ஏற்பாடு உலகில் ஒழிக்கப்பட்டுவிட்டது. நீகிரோ கஷ்டமான வேலை செய்து அறியான். வருஷத்தில் ஆறுமாதம் வேலை செய்து அவன் ஜீவித்து விடக்கூடும். பின்னர், அவன் ஏன் தன்னை நீண்ட காலத்துக்கு ஓர் எஜமானனிடம் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்? ஒழுங்காய் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் இல்லாமல் ஆங்கிலேயருடைய தோட்ட வேலை சரியாக நடைபெறவில்லை. ஆதலின் அவர்கள் இந்திய அரசாங்கத்துடன் கடிதப் போக்கு வரவு தொடங்கி, தங்களுக்குத் தொழிலாளிகள் அனுப்பித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். இந்திய அரசாங்கம் இக்கோரிக்கைக்கு இணங்கவே, இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகளின் முதல் கூட்டம் 1860-ம் வருஷம் நவம்பர் மீ 16உ நேட்டாலை யடைந்தது. மேற்படி தேதி இச்சரித்திரத்தில் மிக முக்கியமான தொன்றாகும். அஃதில்லையென்றால் தென்னுப்பிரிக்காவில் இந்தியர்கள் இல்லை; எனவே சத்தியாக்கிரஹமுமில்லை. இந்தப் புத்தகம் எழுதப்படப் போவதுமில்லை.

இந்திய அரசாங்கம் செய்த காரியம் உசிதமான தன்று என்பதே என் அபிப்பிராயம். இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் அறிந்தோ அறியாமலோ நேட்டாலிலிருந்த தங்கள் சகோதரர்கள் விஷயத்தில் பாரபட்சமுள்ளவர்களாயிருந்தனர். ஒப்பந்தத்தில், தொழிலாளரின் நன்மைகளைப் பாதுகாக்க உத்தேசிக்கப்பட்ட நிபந்தனைகள் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சேர்க்கப்பட்டிருந்தன உண்மையே. அவர்களுடைய சாப்பாட்டுக்குக் கூடியவரை நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், தூர தேசத்துக்குப் போகும் எழுத்து வாசனையறியாத இந்தத் தொழிலாளிகள் தங்களுக்கு ஏற்படும் குறைகளுக்கு எப்படிப் பரிகாரந் தேடுவார்கள் என்னும் விஷயம் போதிய அளவு கவனிக்கப்படவில்லை. அவர்களுடைய பாரமார்த்திகத் தேவைகளைப்பற்றியோ, அவர்களுடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பது குறித்தோ சிறிதும் கவலை செலுத்தப்படவில்லை. சட்டப்படி அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு விட்டதாயினும், முதலாளிகளுக்குத் தங்கள் தொழிலாளிகளை அடிமைகளாக்கும் ஆசையில்லாமற் போகாது என்பதை பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் எண்ணிப் பார்க்கவேயில்லை. நேட்டாலுக்குச் சென்ற தொழிலாளிகள் ஒப்பந்தக் காலத்திற்கு அடிமைகளாகி விடுவார்கள் என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்; ஆனால் அதை அவர்கள் உணரவில்லை. இந்தத் தொழிலாளரின் நிலையை நன்கு ஆராய்ச்சி செய்திருந்த காலஞ் சென்ற ஸர். டபிள்யூ. ஹண்டர் இவ்விஷயமாகக் குறிப்பிடத்தக்க ஒரு சொற்றொடரை உபயோகித்தார். நெட்டாலிலிருந்த இந்தியத் தொழிலாளிகளைப்பற்றி எழுதுங்காலையில், அவர்களுடைய நிலை பாதி அடிமைத் தனம் என்று அவர் சொன்னார். மற்றொரு சமயம் அவர் எழுதிய கடிதத்தில், அவர்களுடைய நிலை அடிமைத் தனத்துக்கு மிக நெருங்கிய அபாய நிலையாகுமென்று குறிப்பிட்டார். நேட்டாலில் ஒரு கமிஷன் முன்பு சாட்சியங் கூறுகையில், அந்த நாட்டின் ஐரோப்பியப் பிரமுகர்களில் முதன்மையானவரான மிஸ்டர் எஸ். [illegible] குறைய ஒப்புக்கொண்டார். இது

## தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி, எழுதியது.

போன்ற சாட்சியங்கள், நேட்டாலின் பிரபல ஐரோப்பியர்களின் வாக்குமூலங்களிலிருந்தே இன்னும் ஏராளமாய்ச் சேகரிக்கமுடியும். அவற்றுள் பல, இவ்விஷயமாக இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பியவிஞ்ஞாபனங்களில் சேர்க்கப்பட்டேயிருந்தன. ஆனால் விதியின் கூறு தனியாயிருந்தது. நேட்டாலுக்குத் தொழிலாளிகளை ஏற்றிச் சென்ற கப்பல் அவர்களுடனே பெரிய சத்தியாக்கிரஹ இயக்கத்தின் விதையையும் கொண்டுபோயிற்று.

நேட்டாலுக்கு ஆள் சேர்க்கும் கங்காணிகளின் ஆசை வார்த்தைகளால் தொழிலாளிகள் மதி மயங்கிப்போனது; அம்மதிமயக்கத்தின் கீழ் அவர்கள் தாய் நாட்டை விட்டுச் சென்றது; நேட்டால் சென்றதும் அவர்கள் கண்கள் திறக்கப்பெற்றது; எனினும் அவர்கள் அங்கேயே தங்கியிருந்தது; அவர்களைப் பின் தொடர்ந்து மற்றவர்கள் சென்றது; சமயமும், சன்மார்க்கமும் விதிக்கும் கட்டுப்பாடுகளை யெல்லாம் அவர்கள் மீறியது; (அக்கட்டுப்பாடுகள் தாமே கழன்றன என்று சொல்லலாம்.) அபாக்கியர்களான இந்தமனிதர்களிடையே மணவிக்கும், வைப்பாட்டிக்கு முள்ளவேற்றுமையுங்கூட அற்றுப்போனது—ஆகிய இந்த விபரங்களை யெல்லாம் கூறுவதற்கு இப்புத்தகத்தில் இடம் போதாது.

ஒப்பந்தத்தொழிலாளர் நேட்டால் அடைந்த செய்தி மோரிசி (மொரிஷியஸ்)க்கு எட்டியதும், அங்கிருந்த வியாபாரிகள் அவர்களைத் தொடர்ந்து நேட்டால் செல்லத் தூண்டப் பெறலாயினர். இந்தியாவிலிருந்து நேட்டால் போகும் வழியில் மோரிசி இருக்கிறது. இங்கு தொழிலாளிகளும் வியாபாரிகளுமான ஆயிரக்கணக்கான இந்தியர் குடியேறியிருந்தார்கள். வியாபாரிகளில் ஒருவரான காலஞ்சென்ற சேத் அபு பக்கர் ஆமோத் நேட்டாலில் ஒரு கடை வைக்கலாமென்று யோசித்தார். இந்திய வியாபாரிகளின் திறமையைப்பற்றி அப்போது நேட்டாலிலிருந்த ஆங்கிலேயருக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றி அவர்கள் கவலை செலுத்தவும் இல்லை. ஒப்பந்தத் தொழிலாளிகளின் உதவியினால் கரும்பு, தேயிலை, காப்பி முதலிய லாபகரமான பயிர்களை அவர்கள் செய்து செழித்திருந்தார்கள். அவர்கள் சர்க்கரை உற்பத்தி செய்து, வியப்புறத்தக்க சிறு காலத்திற்குள் தென்னுப்பிரிக்காவுக்குச் சர்க்கரையும், தேயிலையும், காப்பியும் கொடுக்கத் தொடங்கினார்கள். அவர்கள் ஏராளமான பணம் சேர்த்தபடியால் அரண்மனைகளை யொத்த மாளிகைகளைக் கட்டிக் கொண்டார்கள். பொட்டைத் திடலாயிருந்த பிரதேசத்தை கிளி கொஞ்சும் தோட்டமாக்கி விட்டார்கள். இந்நிலையில், கண்யமும் சாமார்த்தியமுமுள்ள அபு பக்கர் சேத் போன்ற வியாபாரி தங்கள் மத்தியில் குடியேறியதைப்பற்றி அவர்கள் கவலைப் படவில்லை. இதுமட்டுமன்றி, ஓர் ஆங்கிலேயர் அவருடன் கூட்டாளியாகவும் சேர்ந்தார். அபு பக்கர் சேத் வியாபாரம் செய்து நிலமும் வாங்கினார். அவர் செழிப்பைப்பற்றிய செய்தி அவர் பிறந்த இடமான போர்பந்தரிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் பரவியது. இதன் பயனாக, மேமான் வகுப்பார் இன்னும் சிலர் நேட்டாலை யடைந்தனர். சூரத்தைச் சேர்ந்த போராக்கள் அவர்களைத் தொடர்ந்து சென்றார்கள். இவ்வியாபாரிகளுக்குக் கணக்கர்கள் தேவையாயிருந்தது. எனவே, குஜராத்திலிருந்தும் கத்தியவாரிலிருந்தும் ஹிந்து கணக்கர்கள் அவர்களுடன் சென்றார்கள்.

இவ்வாறு, நேட்டாலில் இரு வகுப்புகளைச் சேர்ந்த இந்தியர்கள் குடியே[illegible] பாரிகளும் அவர்களின் சுதந்திர ஊழி

யர்களும். இரண்டாவது, ஒப்பந்தத் தொழிலாளிகள். நாளடைவில், ஒப்பந்தத் தொழிலாளிகளுக்குக் குழந்தைகள் பிறந்தன. இக்குழந்தைகள் வேலை செய்யவேண்டிய கட்டாயமில்லாவிடினும், சட்டப்படி பல கடுமையான நிர்ப்பந்தங்கள் அவர்களுக்கேற்பட்டிருந்தன. அடிமைகளின் குழந்தைகள் அடிமைத்தனத்தின் இழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியுமா? தொழிலாளிகள் ஐந்து வருஷம் வேலை செய்ய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து நேட்டாலுக்குச் சென்றவர்கள். ஐந்து வருஷத்துக்குப் பிறகு அவர்கள் வேலை செய்ய வேண்டிய கட்டாயமில்லை. பின்னர் சுதந்திரமுள்ள தொழிலாளிகளாக வேலை செய்யவோ அல்லது வியாபாரம் செய்யவோ அவர்களுக்கு உரிமையுண்டு. விரும்பினால் நேட்டாலிலேயே அவர்கள் குடியேறிவிடலாம். சிலர் அப்படியே செய்தார்கள். மற்றும் சிலர் தாய் நாட்டுக்குத் திரும்பி விட்டார்கள். நேட்டாலிலேயே தங்கியவர்களுக்குச் "சுதந்திர இந்தியர்கள்" என்ற பெயர் வழங்கலாயிற்று. இவ்வகுப்பாரின் தனிப்பட்ட நிலையை அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். மேலே குறிப்பிட்ட முழுச்சுதந்திர இந்தியர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை. உதாரணமாக, அவர்கள் ஓரிடமிருந்[illegible] மற்றோர் இடம் போக விரும்பினால் அநுமதிச் சீட்டுப் பெறவேண்டும். அவர்கள் கலியாணம் செய்து கொண்டால், கலியாணம் சட்டப்படி செல்லவேண்டுமானால், இந்தியப் பாதுகாவலர் என்னும் உத்தியோகஸ்தர் முன்னிலையில் அதைப் பதிவு செய்யவேண்டும். இன்னும் பல கடுமையான நிர்ப்பந்தங்களுக்கும் அவர்கள் ஆளாகியிருந்தனர்.

இந்திய வியாபாரிகள், ஒப்பந்தத் தொழிலாளிகளுடனும், 'சுதந்திர இந்தியர்'களுடனும் மட்டுமன்றி நீகிரோவர்களுடனும் வியாபாரம் செய்யலாமென்று கண்டார்கள். இந்திய வியாபாரிகள் இருந்தது நீகிரோவர்களுக்கு மிகவும் சௌகரியமாயிருந்தது. அவர்களுக்கு வெள்ளைக்கார வியாபாரிகளிடம் பயம் அதிகம். வெள்ளைக்கார வியாபாரி நீகிரோவருடன் வியாபாரம் செய்ய விரும்பினான். ஆனால் நீகிரோ வாடிக்கைக்காரர்கள் அவனிடம் மரியாதை எதிர்பார்த்தல் மட்டும் கூடாது. அவர்களுடைய பணத்துக்குச் சரியாகச் சாமான் கொடுத்தாலே அவர்கள் தங்களுடைய பேரதிஷ்டமாகக் கருதவேண்டும். அவர்களில் சிலர் நாலு ஷில்லிங் சாமான் வாங்கிக்கொண்டு ஒரு பவுன் கொடுத்துப் பாக்கி 16 ஷில்லிங்குக்குப் பதிலாக 4 ஷில்லிங்கே பெற்றுப்போவதுண்டு. சில சமயம் அது கூடக் கிடையாமல் போய்விடும். நீகிரோ பாக்கி கேட்டால், அல்லது கொடுத்த சில்லரை குறைவாயிருக்கிற தென்பதை எடுத்துக் காட்டினால் கடும் வசவுகள் தான் கிடைக்கும். இத்துடன் நின்றால் அவன் தன் அதிஷ்டத்தை வியந்து மகிழ்ச்சியடையலாம். ஏனெனில் சிலசமயம் வசவுகளுக்குத் துணைப்பலமாக அடியோ, உதையோ கொடுக்கப்படுவது முண்டு. இங்கிலீஷ் வியாபாரிகள் எல்லாரும் இப்படி நடந்து கொண்டார்களென்று நான் சொல்லவில்லை. ஆனால் இத்தகைய சம்பவங்கள் நிறைய நடந்தன என்று நிச்சயமாய்க்கூறலாம். இதற்கு நேர்மாறாக, இந்திய வியாபாரிகள் நீகிரோவர்களிடம் பிரியமாகப் பேசியதுடன் சில சமயம் அவர்களுடன் சேர்ந்து சிரிப்பது முண்டு. ஒன்று மறியாதவனான நீகிரோ கடைக்குள் நுழைந்து தான் வாங்க விரும்பும் சாமான்களை எடுத்துப் பரீட்சித்துப் பார்க்கவிரும்புவான். இந்திய வியாபாரிகள் இவற்றிற்கெல்லாம் இடங் கொடுத்தார்கள். இதில் அவர்களுக்குப் [illegible] தங்கள் சுயநலங்கருதியே இப்படி அவர்கள் நடந்து கொண்டிருக்கலாம். நீகிரோ வாடிக்கைக்காரனை மோசம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தால் இந்தியன் அதை நழுவவிடாதவனாயிருக்கலாம். ஆனால் அவன் மரியாதையாய் நடந்து கொண்டபடியால் நீகிரோவர் அவனை விரும்பலாயினர். மற்றும், நீகிரோ இந்திய வியாபாரிகளிடம் பயப்படுவதேயில்லை. இந்தியன் நீகிரோவரை மோசம் செய்ய முயன்று, அது கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்களும் நேர்ந்திருக்கின்றன. நீகிரோ வாடிக்கைக் காரர்கள் இந்திய வியாபாரிகளை வைதல் அடிக்கடி நேர்வதுண்டு. ஆகவே இந்தியர்களையும், நீகிரோவர்களையும் பொறுத்தவரையில், இந்தியர்களே நீகிரோவரிடம் பயப்படுகிறார்கள் என்று சொல்லலாம். இதன் பயனாக, நீகிரோவருடன் வியாபாரம் இந்திய வியாபாரிகளுக்கு மிகவும் லாபகரமாயிருந்தது. நீகிரோவர்களோ தென்னுப்பிரிக்கா முழுவதிலும் பரவியிருக்கின்றனர்.

சென்ற நூற்றாண்டின் கடைசியில், 1880-ம் ஆண்டுக்கு முன் பின்னாக, டிரான்ஸ்வாலிலும் ஆரஞ்சு பிரீஸ்டேட்டிலும் போயர் குடியரசுகள் இருந்து வந்தன. இக்குடியரசுகள் முற்றும் வெள்ளைக்காரர் அரசுகளே என்றும் அவற்றில் நீகிரோவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லையென்றும் சொல்ல வேண்டுமா? போயர்கள் கபடமற்றவர்களும், டாம்பீக மில்லாதவர்களுமான ஜனங்கள் என்றும், இந்திய வியாபாரிகளிடம் சாமான் வாங்குவது கௌரக் குறைவு என்று கருதமாட்டார்களென்றும், ஆதலின் அவர்களுடனும் வியாபாரம் செய்யலாமென்றும் இந்திய வியாபாரிகள் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆதலின் இந்திய வியாபாரிகள் சிலர் டிரான்ஸ்வாலுக்கும், பிரீஸ்டேட்டுக்கும் சென்று அங்கே கடை வைத்[illegible]ர்கள். அக்காலத்தில் ரயில்வேக்கள் இல்லையானபடியால் வியாபாரிகளுக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. இந்திய வியாபாரிகள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. போயர்களும், நீகிரோவரும் வாடிக்கைக்காரர்களாகவே அவர்கள் ஏராளமாக வியாபாரம் செய்தனர். அவ்வாறே இந்திய வியா[illegible] கேப் காலனிக்குச்சென்று அங்கும் சுமாராகப் பணம் சம்பாதிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு நான்கு மாகாணங்களிலும் இந்தியர்கள் சிறு தொகையினராகப் பரவிக் கிடந்தார்கள்.

தற்போது தென்னுப்பிரிக்காவில், முழுச் சுதந்திரமுள்ள இந்தியர்கள் நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் பேர் இருக்கின்றனர். ஒப்பந்தம் நீங்கப் பெற்றவர்களும், அவர்களுடைய சந்ததிகளுமான "சுதந்திர இந்தியர்கள்" ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் இருக்கிறார்கள்.

---

## கதர் இயக்கமும் லங்காஷயர் பருத்தி வியாபாரமும்.

கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து கதர அபிவிர்த்தியினால் லங்காஷயர் பருத்தி வியாபார குறைவை யறியலாம்:—

1926-ல் மூலதனத்தின் மீது பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட சராசரித் தொகை 100-க்கு 3¾ வீதமாகும். 1927-ல் மேற்படி சராசரிலாபம் 100க்கு 2½ வீதந்தான். இது 337 பருத்திக் கம்பெனிகளின் கணக்கை ஆதாரமாகக் கொண்டது. 237 கம்பெனிகள் லாபம் எதுவுமே கொடுக்கவில்லை. மற்றும் 291 கம்பெனிகளை எடுத்துப் பார்க்கும் போது, அவற்றில் 72 கம்பெனிகள் 722,818 பவுன் லாபம் அடைந்திருக்கின்றன. 209 கம்பெனிகள் மொத்தம் 1,567,705 பவுன் நஷ்ட மடைந்திருக்கின்றன. மற்றும், 334 கம்பெனிகளின் லாப நஷ்டக் கணக்குகளை ஆராய்ந்தால் 111 கம்பெனிகளுக்கு 1,949 881 பவுன் நிலுவை பாக்கியும், 213 கம்பெனிகளுக்கு 9, 882, 428 பவுன் கடனும் இருக்கின்றன. 1927-ம் ஆண்டில் 92 கம்பெனிகள் கலைக்கப்பட்டன. 20 கம்பெனிகள் கடன் கொடுக்க முடியாமல் கடன்காரர்களுடன் பலவகை ஒப்பந்த ஏற்பாடுகள் செய்து கொண்டன. 26 வியாபாரிகள் 'மஞ்சட் கடுதாசி' (இன்ஸால்வன்ட்) பெற்றுக் கொண்டார்கள். 14 கம்பெனிகளுக்கு [illegible]

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection